RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt21131

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

மா. வடிவேலு முதலியாரின் உரைநெறி: சிவவாக்கியர் பாடல்களுக்கான உரையை முன்வைத்து

மா. கோமதி [அ,*]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா.

M. Vadivelu Mudaliar's text Description about the Sivavakkiyar songs

Gomathi M [a,*]

[a] Department of Tamil, Periyar University, Palkalai Nagar, Salem-636011, Tamil Nadu, India.

Corresponding Author:
gomathimtamil@gmail.com

Received : 31-10-2020
Accepted : 05-01-2021

ABSTRACT

This article is about the eloquence of the narrator Vadivel Mudaliar. Demonstrates his erudition and the strategies he has adopted in his speech. Texts are structured according to the purpose of the text and the background of the authors. The eloquence of each narrator varies according to the nature of the texts they handle. Vadivelu Mudaliar has written texts for Sivavakkiyar's songs on various strategies. In it, the text is stated based on semantic interpretation. He follows the principle of summation and adopts the technique of expressing multiple meanings in a word. Quiz-based narration is a method followed by Ilambooranar. He uses it in the songs of Sivavakkiya. The text is set up in the form of asking and answering a question. He has quoted from other texts and explained the verse in the form of a quotation mark. VadiveluMudaliar has written the lyrics for the songs of Sivavakkiyar Title, Explaining the relevance of the title and remove the sariyai, such as following the techniques.

Keywords: Vadivel Mudaliar, Sivavakkiyar, Sivavakkiyar's songs, Ilambooranar

ஆசிரியர் குறிப்பு

திருமதி. மா.கோமதி அவர்கள் முனைவர்பட்ட ஆய்வினை பெரியார் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார். பல்வேறு பன்னாட்டு, தேசிய கருத்தரங்குகளில் கட்டுரைகள் வாசித்தளித்துள்ளார். 7 பன்னாட்டு கருத்தரங்க கட்டுரைகளும், 5 தேசிய கருத்தரங்க கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. பன்னாட்டு ஆய்விதழ்களில் 4 கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. 5 பயிலரங்குகளில் பங்குபெற்றுள்ளார்.

முன்னுரை

தமிழ் இலக்கிய இலக்கணங்கள் தோற்றம் பெற்றது முதலாகச் சமகாலம் வரையிலும் கால நீட்சியில் தொடர்ந்து பயணிப்பதற்கு உரைகளே முதன்மைக் காரணங்களாகின்றன. மூலநூலாசிரியனின் கருத்தை முழுமையாக வாசகனிடம் கொண்டு சேர்க்கும் அரும்பணியை உரையாசிரியர்கள் செய்கின்றனர். ஒரு ஆசிரியனின் நூலானது படிப்போரின் நன்மதிப்பைப் பெறுவது உரையாசிரியர்களால்தான் எனலாம். ஒருநூலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உரைகள் எழுதப்படுகின்றன. முன்னமே மூலநூலுக்கென்று ஒரு முதல் உரை இருப்பினும், மீண்டும் தொடர்ந்து அந்நூலுக்கு பல உரைகள் உரையாசிரியர்களால் உருவாக்கப்படுகின்றன. உரைகள் பல தோன்றுவதற்குக் முந்தைய உரைகளின் போதாமையும், மொழி மாற்றங்களும் காரணமாக அமைகின்றன. அது போல காலத்தின் தேவையாகவும் உரைகள் தோன்றுகின்றன. பொதுவாகவே உரையாசிரியர்கள் உரைஎன்னும் ஓர் குடையின் கீழ் சங்கமித்தாலும் நடையாலும் நெறியாலும் ஒருவருக்கொருவர் மாறுபடுவர். இத்தகுச் சூழலில் மா. வடிவேலு முதலியார் அறியப்படுகிறார். மூலநூலை மட்டுமே வைத்துக் கொண்டு, முன்னைய உரைநெறிகள் ஏதுமின்றி, மறைபொருள்கூறு கொண்ட சித்தர்பாடல்களுக்கு உரை இயற்றுவது கடினமான செயல் இத்தகைய செயலை முன்னெடுத்த மா. வடிவேலு முதலியார் சிவவாக்கியரின் பாடல்களுக்கு உரை செய்திருப்பது அவர் தம் நுண்மான் நுழைப்புலமைக்குச் சான்றாகின்றது (Vadivelu Mudhaliar, 1953). அவர் செய்திருக்கும் உரையினூடாக அவர்தம் உரை நெறிகளை கண்டுணர்ந்து வெளிப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

சொற்பொருள் விளக்கம்

நூலாசிரியர் காலச் சூழலில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் அடுத்தகாலச் சூழலுக்கு கடினத் தன்மை கொண்டதாக உள்ளன. ஆகையால் பொருள்புரியாமல் மூலநூலில் கருத்து முழுமையாக வாசகனைச் சென்றடையவது இயலாததாகிறது. அக்குறையைப் போக்க உரையாசிரியர்களால் முதன் முதலில் பின்பற்றபட்ட உரைநெறியே சொற்பொருள் விளக்க உரைநெறியாகும். சொற்களுக்கு எவ்வாறு பொருள் தரவேண்டும் என்று குருசாமி கூறுகையில், "சொற்களுக்குப் பொருள்தரும்போது வெறும் அகராதிப் பொருளை மட்டும் தராமல், நுண்பொருளையும், நயப்பொருளையும், அக்கால வழக்கத்தினையும் கலந்து தருதல் உரையாசிரியர்களின் இயல்பாகும்" (Gurusamy, 2008, p.55) என்கிறார். சிவவாக்கியர் பாடல்களுக்கு உரைசெய்த மா.வடிவேலு முதலியார் சொற்பொருள் விளக்கம் என்னும் இவ்வுரை நெறியை மிகவும் அரிதாகவே தம் உரையில் கையாண்டுள்ளார்.

* மாடு= பொன்னெனினுமாம் (ப.22)
* அரங்கம் = நடிக்குமிடம் (ப.72)

இவ்வாறாக இரண்டு இடங்களில் மட்டும் அவர் சொற்பொருள் விளக்கத்தைக் கையாண்டுள்ளமையைக் காணமுடிகிறது. தலைப்பு, பாடல், உரை என்ற அமைப்பு முறையை அடுத்து மீண்டும் அதே பக்கத்தில் இறுதியாக அடிகோடிட்டு சொற்பொருள் விளக்கத்தைத் தருகிறார். பாடல் முடிந்தவுடனே அதன்கீழ் பொருள்விளக்கம் தரும் உரையாசிரியர்கள்

மத்தியில், வாசிப்பவர்களுக்கு இடையூறு ஏற்படாமலிருக்க உரைக்குக்கீழ் அடிகோடிட்டுச் சொற்பொருள் விளக்கம் தருவது இவரது உரைநெறியாக அமைந்துள்ளது.

தொகைச்சொல் விளக்கம்

தொகைச்சொல் விளக்கம் என்பது அனைத்து உரையாசிரியர்களும் பின்பற்றும் ஒரு பொதுநெறியாகும். சிவவாக்கியர். பாடலுக்கு உரைசெய்த மா. வடிவேலு முதலியார் அவர்களும் தொகைச்சொற்களை விரித்துக் கூறியுள்ளார். இவ்வாறான தொகைச்சொல் உரைநெறி மரபைக் குறித்து பெ. மாதையன், "மும்மை, நாற்பொருள், ஐம்பூதம், அறுசுவை, எழுபிறப்பு, எண்குணம், நவதானியம், பத்துக்குற்றம், பத்தழகு, தசாவதாரம் என்றாற் போன்று வரும் சொற்களின் பொருள் அவற்றின் விரிவே ஆகும். இது தமிழின் பொதுமரபு திவாகரம் போன்ற நிகண்டுகளின் பன்னிரண்டாம் தொகுதி இந்த மரபை, இந்ததொகுதி பொருள்விளக்கத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டதாக உள்ளது சொற்களின் பொருளை விரித்துக் கூறும் மரபை உரையாசிரியர் உரைமரபிலும் காணமுடிகிறது" என்கிறார் (Mathaiyan, 2004, p.45)

"கருக்குழி யிலாசையாய்க் காதலுற்று நிற்கிறீர்" (சிவ.பா.74)

என்ற சிவவாக்கியர் பாடலை விளக்க முற்படும் உரையாசிரியர் மா. வடிவேலு முதலியார் திருத்துருத்தி மெய்யினால் என்ற சொல்லுக்கு 'தநுவாதி' நான்கைக் கொண்டே என்ற ஒரு சொல்லாட்சியைப் பயன்படுத்துகிறார். தநுவாதி என்ற சொல்லாட்சியை வேறு எந்த உரையாசிரியர்களும் பயன்படுத்தவில்லை. "தநுவாதி- தநு, கரணம், புவனம், போகம்" என்கிறார். (ப.74) மேலும், மற்றொரு பாடலில்,

"அஞ்சுமஞ்சு மஞ்சுமஞ்சு மல்லல் செய்துநிற்பதும்
அஞ்சுமஞ்சு மஞ்சுமே யமர்ந்துளே யிருப்பதும்
அஞ்சுமஞ்சு மஞ்சுமேயாதரிக்க வல்லிரேல்
அஞ்சுமஞ்சு மும்முளேயமர்ந்த தேசிவாயமே" (சிவ.பா.206)

என்ற பாடலுக்குக் கீழ்கண்டவாறு தொகைச்சொல் விளக்கம் தருகிறார்.

'ஐந்து பூதங்கள் பிருதிவி, அப்பு, தேயு, வாயுஆகாயம்
ஐந்து பொறிகள்- மெய், வாய், கண், மூக்கு, செவி
ஐந்து கர்மேந்திரியங்கள்- வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்
ஐந்து ஞானேந்திரியங்கள்- சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்" (ப.190)

"நவ்விரண்டு காலதாய் நவின்ற யவ்வயிறதாய்"(சிவ.பா.90)

என்ற பாடலில் வரும் ஆறாதாரம் என்னும் சொல்லுக்குக் கீழ்கண்டவாறு தொகைச்சொல் விளக்கம் தருகிறார்.

"ஆறாதாரம் - மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை"(ப.2)

மேலும், ஒவ்வொரு ஆறாதாரத்திற்கும் விளக்கம் தந்துள்ளார். இவ்வாறாகத் தொகைச்சொல் விளக்கம் தரும் உரைநெறியை மா. வடிவேலு முதலியாரின் உரையில் காணமுடிகிறது.

வினாவிடை

செய்யுளின் பொருளை முழுமையாக விளக்க நினைக்கும் உரையாசிரியர், உரையில் தாமாகவே வினாவினை எழுப்புவது போல் எழுப்பி வாசகனிடம் ஆர்வத்தைத் தூண்டும் நோக்கோடு பின்பு அதற்குத் தாமாகவே விடையைக் கூறுவது போல் கூறும் உரை நெறியை வினாவிடை முறைஎன்பர். தொல்காப்பியத்திற்கு முழுமையாக உரை இயற்றிய இளம்பூரணர் பின்பற்றிய சிறப்பான உரைநெறி வினாவிடை நெறியாகும். அவரைத் தொடர்ந்து பல உரையாசிரியர்களும் இந்நெறியைப் பின்பற்றினர். இது குறித்துக் கூறும் செல்வநாயகம் "ஒருபொருளை விளக்குமிடத்து அல்லது கட்டுரைக்கும் இடத்து முதலில் வினாவாக்கியம் ஒன்றை அமைத்து ஈற்றில் நேர்விடையுருவ வாக்கியம் அமைத்து நடுவிலே வினாவுருவமாகவும், விடையுருவமாகவும் அமையாதவையாய் விளக்கம் கூறும் சில வாக்கியங்களை அமைத்துக் கூறும் வகையினை இளம்பூரணர் உரையிலே தெளிவாக காணமுடிகிறது" (Selvanayakam, 2016, p.49) என்கிறார்

சிவவாக்கியர் பாடல்களுக்கு உரைசெய்த வடிவேலு முதலியாரின் உரையிலும் வினாவிடை அமைப்பு முறையினைக் காணலாம். மூலநூலாசிரியர் எழுப்பும் மூலநூலில் உள்ள வினாக்களுக்கு விடை கூறுவது இவரே வினாகேட்டு, அதற்குவிடை கூறுவது என இருவேறு நிலைகளில் வினாவிடை அமைப்பு முறையினை இவரது உரையில் பகுத்துக் காணலாம். விடை கூறும்போது ஆம், இல்லை, ஆகா, அறியேம் என்னும் சொற்களைப் பயன்படுத்தியும், வினாகேட்கும் போது ஏது, எப்படி, ஏன், யாரே, ஐய வினா என்று குறிப்பிடுவதையும் அவர்தம் உரைநெறியாக அமைத்துக் கொண்டமையைக் காணமுடிகிறது.

"மண்ணும் நீ விண்ணும்நீ மறிகடல்களே ழும்நீ

.....

.....

நண்ணுநீர்மை நின்ற மாதம்நண்ணு மர்றருளிடாய்" (சிவ.பா.8)

பஞ்சபூதங்களும் மடிகின்ற தன்மையுடைய சத்த சாகரங்களும், கணிதங்களும், இலக்கண விசேஷங்களும் இசைநூலின் விஷயமாத்திரை அட்சரங்களும் கண்ணும் கண்ணின்மணியும் அதன் கண் பார்வையும் ஆகியயாவும் நீயேயாயிருக்கின்றாய். ஆகையால் ஆன்ம கோடிகள் அடைந்து உய்யும்படியான தங்களுடைய திருவடிகளை அடையும் விதம் எப்படியோ? என்று அதற்கான விடையையும் தருகிறார்.

"சாத்திரங்க ளோதுகின்ற சட்டநாத பட்டரே

வேர்த்திரைப்பு வந்தபோது வேதம் வந்துதவுமோ" (சிவ. பா.10)

நாலுவேதங்களையும், ஆறுசாஸ்திரங்களையும் தினந்தோறும் பாராயணஞ் செய்து வருகின்ற ஓ! பட்டரே! உங்களுக்கு வேர்வையும், இரைப்பும் உண்டாகவிருக்கின்ற சிரம திசையில் இப்பொழுது பாராயணஞ் செய்யப்படுகின்ற இந்த வேதங்கள் வந்து

உதவுவனவாமோ? ஆகா! இவ்வாறாக இப்பாடலில் சிவவாக்கியர் எழுப்பும் வினாவிற்கு உரையாசிரியர் வடிவேலு முதலியார் பதிலளிக்கிறார். வினாவிடை அமைப்பினை மிக அதிகமாகவே தம் உரையில் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர் மா.வடிவேலு முதலியார்.

உரைமேற்கோள் நெறி

மூல நூலாசிரியன் கருத்தை மேலும் தெளிவுபடுத்த அல்லது விளக்க உரையாசிரியர் அப்பாடல் பொருண்மை சார்ந்தக் கருத்துக்களை பிறநூல்களில் இருந்து எடுத்து பொருத்திக்காட்டுதல் என்பது ஒரு சிறப்பான உரைநெறியாகும். அந்நெறியை வடிவேலு முதலியாரும் கையாண்டுள்ளார். சிவவாக்கியர் பாடல்களுக்கு தாம் செய்த உரையில் 'அறுபது' மேற்கோள் பாடல்களை கையாண்டுள்ளமையைக் காணமுடிகிறது. சிலபாடல்கள் ஆசிரியர்பெயர், நூலின்பெயர் என்று எதுவும் குறிப்பிடாமல் இடம் விளங்கா மேற்கோள்களாக உள்ளன. தாம் உரை செய்யும் மூலநூல் பாடல்களையே சில இடங்களில் மேற்கோள்களாகக் காட்டியுள்ளார்.

"நாலு வேதமோது வீரஞனெபாத மறிகிலீர்
பாலுணெய் கலந்தவாறு பாவிகாளறிகிலீர்" (சிவ.பா.12)

என்ற பாடலுக்கு விளக்கம் கூறும் வடிவேலுமுதலியார், பாலின் கண்நெய் எங்ஙனம் மறைந்து கிடக்கின்றதோ அங்ஙனமே சர்வ ஆன்மாக்கள் தோறும் மறைந்திருக்கிறனென்றும், அப்பாலை முயற்சிக்க நெய்வெளிப்படுமாறு போல அன்பை வளர்க்க அவன் வெளிப்படுவான் என்றும் உணர்த்துவான் என்கிறார் இதனை மேலும் விளக்க,

"விறகிற்றீயினன் பாலிற்படு நெற்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்
உறவு கோனட்டுணர்வு கயிற்றினால்
முகறு வாங்கிக் கடைய முன்னிற்பனே"

என்று திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளி இருப்பதினாலறிக என்கிறார். சொல் ஒற்றுமை, பொருள் ஒற்றுமைக் காரணமாகத் திருநாவுக்கரசர் பாடலை இங்கு மேற்கோளாகப் பயன்படுத்தி உள்ளமையை அறிய முடிகிறது. இதுபோன்றே திருமந்திரம், சைவசித்தாந்த சாத்திரம், நாலடியார், திருக்குறள், மூதுரை, திருவாசகம், நன்னெறி, சிதம்பரச் செய்யுட்கோவை, தேவாரம் ஆகிய நூல்களில் இருந்தும் மேற்கோள்பாடல்களை எடுத்து பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகிறது. சங்க இலக்கியம் சார்ந்த மேற்கோள்கள் அரிதாகவே உள்ளது. பக்தி இலக்கியம் சார்ந்த மேற்கோள்கள் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது தெளிவாகிறது. மேற்கோளின் பயன்பாடாக மு.வை. அரவிந்தன் கூறுகையில், "சங்க இலக்கியத் தொகைநூல்களில் இடம்பெறாத எத்தனையோ பாடல்களை நாம் இழந்து விட்டோமே என்ற ஏக்கம் நெஞ்சத்தில் எழுகின்றது. ஆனால் அத்தனை பாடல்களும் மறைந்து விடவில்லை. கால வெள்ளத்தில் நீந்தி ஒதுங்கி வந்து சில பாடல்கள் வாழ்வு பெற்று விட்டன உரையாசிரியர்களின் காலம் வரை வாய்மொழியாகச் செவிவாயிலாக வாழ்ந்து வந்தபாடல்கள் உரைகளில் மேற்கோள்களாய் இடம்பெற்றன உரையாசிரியர், தமக்கு முன்வழங்கி வந்த பழம் பாடல்களையும் தம்காலத்தில் தோன்றிய

புதுப்பாடல்களையும் தம் உரைகளில் எடுத்துக்காட்டியுள்ளார்" (Aravindhan, 2013, p.685) சிவவாக்கியர் பாடலுக்கு பல உரைகள் வந்திருப்பினும் அதிகமாக மேற்கோள்களைப் பயன்படுத்தியப் பெருமை உரையாசிரியர் மா. வடிவேலு முதலியாரையே சாரும்.

தலைப்பிடல்

மூலநூலாசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் தலைப்பிட்டு எழுதவில்லை. ஆனால் உரையாசிரியரான மா. வடிவேலு முதலியார் அனைத்துப் பாடல்களுக்கும் தலைப்பிட்டு எழுதியுள்ளார். இதுவே இவரது 'சிறப்புநெறி' ஆகும். ஒரே தலைப்பு இரண்டு பாடல்களுக்கு வந்தால் இலக்கண மாட்டேறு உத்தியும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- ✓ ஞானம்
- ✓ கடவுள்நிலை
- ✓ ஒடுக்கநிலை
- ✓ யோகநிலை
- ✓ தேகநிலை
- ✓ சரியைவிலக்கல்
- ✓ கிரியைவிலக்கல்
- ✓ இதுவுமது

இவ்வாறாக இவர் உரையில் பயன்படுத்தப்பட்டுள்ள 519 பாடல்களுக்கும் தலைப்பிட்டு உரை செய்துள்ளமை வடிவேலு முதலியாரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது. சிவவாக்கியார் பாடல்களில் ஆழ்ந்த புலமை கொண்டமையால் இவ்வாறு தலைப்பிட்டு உரையெழுத்தியுள்ளார்.

தலைப்பின் பொருத்தப்பாட்டை விளக்குதல்

முற்கால மற்றும் பிற்கால உரையாசிரியர்களிடமிருந்து மா. வடிவேலு முதலியாரின் உரை வேறுபட்டும், தனிச்சிறப்புப் பெற்றும் இருப்பதற்கான காரணம் அவர் கையாண்டுள்ள தலைப்பின் பொருத்தப்பாட்டை விளக்குதல் என்ற புதுவகையான உரைநெறியாகும்.

சரியைவிலக்கல்

"ஓடியோடி யோடியோடியுட் கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி பெண்ணிறந்த கோடியே" (சிவ.பா.3)

ஒவ்வொரு ஆன்மாக்களிலும் சோதி சொரூபனாய்க் கலந்திருக்கிற சுவாமியைத்தம் முன்கலந்திருக்கின்றாரென்று உணர்ந்து அவனை அறியும் வழியை ஆராய்ந்து பாராமல் காடு, மலை நாடு முதலிய இடங்களுக்கு அவனைத் தேடிக்கொண்டு போய் இறந்தவர்கள் அநேக மனிதர்கள். பாடலுக்கான விளக்கம் கொடுத்த பின்பு அப்பாடலுக்கான தலைப்பு 'சரியைவிலக்கல்' என்று வைத்தற்கான காரணத்தை விளக்குவதால் இது தலைப்பின் பொருத்தப்பாட்டை விளக்குதல் என்றாயிற்று.

இது பூப்பிரதஷணம் செய்து வருத்தாமல் உங்களுக்குள்ளேயே நாடிப்பாருங்கள் என்று விளக்குதலின் சரியை விலக்கல் எனப்பட்டது என்கிறார் உரையாசிரியர் வடிவேலு முதலியார்.

முடிவுரை

சிவவாக்கியர் முதலான சித்தர் பலரின் பாடல்கள் என்பது மறை பொருளைத் தன்னகத்தே கொண்டிருப்பன. அவை வெளிப்படையாக விளக்கிட ஏற்புடையதன்று அத்தகைய பண்புகளைக் கொண்ட ஓர் இலக்கியத்திற்கு உரை செய்தலென்பது சுலபமான காரியமன்று இந்நிலையறிந்தும் அத்தகைய இலக்கியங்களுக்குப் பல உரைகள் காலந்தோறும் வந்தவண்ணமாகவே உள்ளன. இரும்பினும் அவ்வுரைகளுள் சிவவாக்கியர் பாடல்களுக்கு உரைசெய்த மா. வடிவேலு முதலியாரின் உரை சற்று தனிச்சிறப்புடன் விளங்குகிறது. சித்தர் பாடல்களுக்கு பல உரைகள் எழுதப்பட்டிருப்பினும் சிவவாக்கியர் பாடல்களுக்கென்றே எழுதப்பட்ட முதல் உரையாக அறியப்படுவது மா. வடிவேலு முதலியாரின் உரையே ஆகும். முன்னைய உரைகளும் அல்லது உரைசார்ந்த பல தரவுகளும் கிடைக்கப் பெற்று ஓர் நூலுக்கு உரை செய்தலென்பது வேறு எந்தவொரு அடிப்படைத் தரவுகளும் இன்றி முந்தைய உரைகளைக் கவனங்கொள்ளாமல் தானே உரை செய்வது என்பது வேறு. மா. வடிவேலு முதலியாரின் உரையானது இரண்டாம் வகையைச் சார்ந்தது. ஆயினும் அவர்தம் உரை மூலநூலின் கருத்தைச் சமகால வாசிப்புக்கு எடுத்துக் கொடுக்கும் அரும்பெரும்பணியை மிகச்சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறார் என்றால் அதுமிகையன்று.

சொற்பொருள் விளக்கத்தை மிக அரிதாகவே பயன்படுத்தியுள்ளதையும், மூல நூலாசிரியனின் தொகைச்சொல்லுக்கு உரையாசிரியர் மா. வடிவேலு முதலியார் சரியானசொல், பொருள் விரிவாக்கத்தை எடுத்துகூறியுள்ளதையும் கண்டுணர முடிகிறது. உரையில் பெரும்பான்மையான வினாவிடை நெறியைப் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகிறது. உரைமேற்கோளாக அறுபதுக்கும் மேற்பட்ட உரைமேற்கோள்களைக் கையாண்டு இருப்பதையும், அதிலும் பெரும்பான்மையாகப் பக்தி இலக்கியபாடல்கள் காட்டப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது. உரையாசிரியர்கள் பின்பற்றும் பொது உரைநெறியைக் கடந்து சிவவாக்கியரின் பாடல்களுக்குத் தலைப்பிடுதல் மற்றும் அத்தலைப்பிற்கான காரணகாரியத்தை விளக்குதல் ஆகிய இரண்டும் மா. வடிவேலு முதலியரின் சிறப்பு உரைநெறி என்பதை புரிந்து கொள்ளமுடிகிறது.

References

Aravindhan, M.V., (2013), Uraiyasiriyarkal, Manivasakar Pathippakam, Chennai, India.

Gurusamy, S., (2008), Perasiriyar Urai Neri, Rani Publications, Chennai, India.

Mathaiyan, P., (2004), Uraiyiyal, Pavai Publicataions, Chennai, India.

Selvanayakam, V., (2016), Tamil Urai Nadai Varalaru, Kumaran Puthaka Illam, Chennai, India.

Vadivelu Mudhaliar, M., (1953), Sivavakkiar Paadalkal Moolamum uraiyum, Rathina Nayakar and Sons, Chennai, India.

Funding: NIL

Acknowledgement: NIL

Conflict of Interest: NIL

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License